www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

# முதல் திருப்புதல் தேர்வு 2023

12 - வகுப்பு மதுரை மாவட்டம் தமிழ் 11. 01. 2023

காலம் 3.00 மணி பகுதி 1 மதிப்பெண்கள் : 90

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக 14X1=14

1. பொருத்துக.
   - அ) தமிழ் அழகியல் – 1. பரலி சு. நெல்லையப்பர்
   - ஆ) நிலவுப்பூ – 2. தி. சு. நடராசன்
   - இ) கிடை – 3. சிற்பி பாலசுப்பிரமணியம்
   - ஈ) உய்யும் வழி – 4. கி. ராஜநாராயணன்

   அ) 4, 3, 2, 1 ஆ) 1, 4, 2, 3 இ) 2, 4, 1, 3 ஈ) 2, 3, 4, 1
2. வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம் அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல் இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடி நீர் உறிஞ்சப்படுதல்
3. சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்ககாலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை அ) அறவோர், துறவோர் ஆ) திருமணமும் குடும்பமும் இ) மன்றங்களும் அவைகளும் ஈ) நியமும் சங்கமும்
4. 'குழிமாற்று' எந்தத் துறையோடு தொடர்புடைய சொல் அ) இலக்கியம் ஆ) கணிதம் இ) புவியியல் ஈ) வேளாண்மை
5. 'பலர் துஞ்சவும் தாம் துஞ்சான்' வீழ்த்திருந்தவரும் அவரைப் பாடியவரும் அ) சோழன் நெடுங்கிள்ளியை – பாணர் ஆ) சோழன் நலங்கிள்ளியை – கோவூர் கிழார் இ) கணைக்கால் இரும்பொறையை – கபிலர் ஈ) கரிகாலனை – உருத்திரங்கண்ணனார்
6. "மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது தன்னேர் இலாத தமிழ்!" இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடைநயம் அ) அடிமோனை, அடி எதுகை ஆ) சீர் மோனை, சீர் எதுகை இ) அடி எதுகை, சீர் மோனை ஈ) சீர் எதுகை, அடிமோனை
7. '<u>பொய்யா வானம்</u>புதுப்பெயல் பொழிந்தென' – தடித்த சொல்லின் இலக்கணக் குறிப்பு அ) வினைத் தொகை ஆ) உரிச்சொல் தொடர் இ) இடைச்சொல் தொடர் ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
8. 'உவா உற வந்து கூடும் உடுபதி, இரவி ஒத்தார்' – யார் யார் ? அ) சடாயு, இராமன் ஆ) இராமன், குகன் இ) இராமன், சுக்ரீவன் ஈ) இராமன், சவரி
9. 'விளியறி ஞமலி' – இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது? அ) எருது ஆ) குதிரை இ) நாய் ஈ) யாழி
10. அல்லல் படுப்பதூஉம் இல் – எவரோடு பழகினால்? அ) வான்போல் பகைவர் ஆ) மெய்ப்பொருள் காண்பவர் இ) எண்ணியாங்கு எய்துபவர் ஈ) தீயினத்தார்
11. தமிழ்நாட்டிலுள்ள பிராம்மிக் கல்வெட்டுகளின் ஆராய்ச்சிக்கு அடிகோலியவர் அ) கே.வி. சுப்பிரமணியனார் ஆ) ஐராவதம் மகாதேவன் இ) தி.வை. சதாசிவ பண்டாரத்தார் ஈ) இவர்களில் எவருமில்லை
12. 'என்னைப் போல் சிவாஜி நடிப்பார். ஆனால் என்னால்தான் சிவாஜிபோல் நடிக்க முடிக்க முடியாது' என்று குறிப்பிட்ட நடிகர் அ) மார்லன் பிராண்டோ ஆ) அமிதாப் பச்சன் இ) அர்னால்டு ஈ) ஜாக்கிசான்
13. ஐம்பெருங்காப்பியம் என்னும் சொற்றொடரைத் தம் உரையில் குறிப்பிட்டவர் அ) சிவஞான முனிவர் ஆ) மயிலை நாதர் இ) ஆறுமுக நாவலர் ஈ) இளம்பூரணர்
14. பொருள் குழப்பமின்றி எழுதுவதற்குரிய காரணங்களுள் பொருந்துவதைத் தேர்க.
    - அ) தேவையான இடங்களில் இடைவெளி விடாமல் எழுதுதல்
    - ஆ) தேவையற்ற இடங்களில் இடைவெளி விட்டு எழுதுதல்
    - இ) நிறுத்தற்குறிகளை உரிய இடங்களில் இட்டு எழுதுதல்
    - ஈ) வல்லின மெய்களைத் தேவையான இடங்களில் இடாமல் எழுதுதல்

## பகுதி II (பிரிவு 1)

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக 3X2=6

15. 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' – விளக்கம் தருக.
16. அதிசய மலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாக தமிழ்நதி கூறுகிறார்?
17. 'எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும்' – யார்க்கு?
18. இறைமகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினர்?

பிரிவு 2 எவையேனும் இரண்டனுக்கு விடை தருக 2X2=4

19. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.
20. 'ஆளுக்கொரு மரம் வளர்ப்போம்' என்னும் முழக்கத் தொடர் வாயிலாக எவற்றை வலியுறுத்துவாய்?
21. 'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்' நூல் பற்றிக் குறிப்பு வரைக.

பிரிவு 3 எவையேனும் ஏழனுக்கு விடை தருக 7X2=14

22. மொழியின் சொற்றொடர் அமைப்பை விளங்கிக் கொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உதவுவன எவை?
23. உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.

    1. பசுமரத்தாணி போல (அல்லது ) 2. மடைதிறந்த வெள்ளம் போல
24. *பின்வரும் கலைச் சொற்களுக்கு ஏற்ற தமிழ் சொற்களைத் தருக* 1. Lobby 2. Checkout
25. *சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க* 1. கோவில் (அல்லது ) 2. வெங்காயம்
26. *பேச்சுவழக்கை எழுத்து வழக்காக மாற்றுக* 1. ஒட்டடாண்ட வௌளயாண்ட கொயந்தையை அப்பா எங்க இஸ்துகினு போனாரு. 2. ரவைக்கு சித்தப்பன காவலுக்குப் போவ சொல்
27. பொருள் வேறுபாடறிந்து தொடர் அமைக்க. 1. ஊண் – ஊன் (அல்லது )2. திண்மை – திண்மை



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

28. ஏதேனும் ஒன்றனுக்கு பகுபத உறுப்பிலக்கணம் தருக அ ) பொலிந்தான் ஆ ) சேர்தல்
29. ஏதேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி தருக அ ) ஒருமையுடன் ஆ ) புதுப்பெயல்
30. கீழ்க்காணும் தொடர்களில் அடைப்புக்குள் உள்ள பெயர்ச் சொல்லைத் தொடர்களுக்கு ஏற்றவாறு மாற்றி எழுது.
1. நேற்று முதல் .............. (அணை ) நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.
2. உங்களுக்கு .............. (யார்) நன்மை என நினைக்கிறீர்கள்?

பகுதி III (பிரிவு 1)

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக 2X4=8

31. "வருபவர் எவராயினும் நன்றி செலுத்து" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
32. இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?
33. மனத்திட்பம் அவசியமான பண்பு என்பதைக் குறள்நெறி நின்று விளக்குக.
34. கடையெழு வள்ளல்களையும் அவர்கள் செய்த செயலையும் அட்டவணைப்படுத்துக.

பிரிவு 2 எவையேனும் இரண்டனுக்கு விடை தருக 2X4=8

35. மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க
36. மயிலை சீனி. வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக.
37. பேரிடர் மேலாண்மை ஆணையம் – விளக்கம் தருக.
38. தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்திற்குச் செய்யும் உதவிகள் யாவை ?

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக 3X4=12

39. கீழ்க்காணும் குறளில் ஏகதேச உருவக அணி எவ்வாறு பயின்று வருகிறது என்பதை விளக்குக.
அ) சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும். *(அல்லது)* ஆ) சொற்பொருள் பின்வரு நிலையணியைச் சான்றுடன் விளக்குக
40. இலக்கிய நயம் பாராட்டுக .மையக்கருத்துடன்ஏற்புடைய மூன்று நயங்களை விளக்குக.

அந்தியிருளாற் கருகும் உலகம் கண்டேன்
அவ்வாறே வான் கண்டேன், திசைகள் கண்டேன்
பிந்தியந்தக் காரிருள்தான் சிரித்த துண்டோ ?
பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவே நீதான்
சிந்தாமல் சிதறாமல் அழகை யெல்லாம்
சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி
இந்தாவென் றே இயற்கை அன்னை வானில்
எழில்வாழ்வைச் சித்தரித்த வண்ணந் தானோ ? – பாரதிதாசன்

41. அ) பாடாண் திணை சான்றுடன் விளக்குக. *(அல்லது )* ஆ) பரிசில் துறை சான்றுடன் விளக்குக.
42. தமிழாக்கம் தருக 1. Learning is a treasure that will follow its owner everywhere. (Chinese Proverb).
2. A new language is a new life. (Persian Proverb).
3. If you want people to understand you, speak their language. (African Proverb).
4. Knowledge of languages is the doorway to wisdom. (Roger Bacon).
5. The limits of my language are the limits of my world. (Willgenstin).
43. தாய்மொழி அல்லது அன்புஎன்னும் தலைப்பில் கவிதை ஒன்றினை எட்டு அடிகளுக்கு மிகாமல் எழுதுக
காது கேளாதவர்களுக்கான மாற்றுவினா.
கீழ்க்காணும் பத்தியைப் படித்து ஐந்து வினாக்களை உருவாக்குக.

மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை . மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது . பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல் . அவள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி, குழந்தையின் பேச்சைக் கேட்பதே ஆகும் . குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது மொழி வளர்ச்சியே ஆகும் . மனம் என்பது பெரும்பாலும் மொழியால் வளர்ந்து அமைந்தது. மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவோரின் மொழியும் வளர்ச்சி பெற்று நிற்கும் மக்கள் அனைவரும் மொழிக்கு ஆசிரியராகவும் உள்ளனர்; மாணவராகவும் உள்ளனர். மொழியை வளர்ப்பவரும் மக்களே ; மொழியால் வளர்பவரும் மக்களே.

பகுதி IV அனைத்து வினாக்களுக்கும் விடை தருக 3X6=18

44. அ) "அறிவுடைமை வாழ்வின் உயர்வுக்குத் துணை நிற்கும்" என்பதை வள்ளுவம் வழிநின்று நிறுவுக. *(அல்லது )*
ஆ) கவிதை எழுத அறிய வேண்டுவனவாகச் சுரதா கூறுவனவற்றை விவரிக்க.
45. அ)குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது – எவ்வாறு? விளக்குக. *(அல்லது )*
ஆ) நிருவாக மேலாண்மை குறித்து வெ. இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
46. அ)பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்க.
*(அல்லது)* ஆ) சங்ககால வரலாற்றை அறிந்துகொள்ள, புகளூர்க் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது? விளக்குக
அடிபிறழாமல் செய்யுள் வடிவில் தருக 4+2=6
47. அ)'குகனோடும்' எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை அடிபிறழாமல் எழுதுக
ஆ) ' என ' முடியும் குறளைஅடிபிறழாமல் எழுதுக.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com